சார்பு நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்

முன்னிலை: திரு.இரா.வேலரஸ், பி.எஸ்.சி., பி.எல்., எல்.எல்.எம்.
சார்பு நீதிபதி

2019ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 11ஆம் நாள் வெள்ளிக்கிழமை

மேல்முறையீட்டு வழக்கு எண் 1/2010

பள்ளிக்கூடத்தான் (எ) சென்றாயன் .. மேல்முறையீட்டாளர்/பிரதிவாதி

//எதிர்//

பெரியாண்டி (வாதி இறந்துவிட்டபடியால் அவரது வாரிசுதாரர்கள் இ.ம.எண் 1/2010 நாள் 28.10.2010 உத்திரவின்படி தரப்பினர்களாக சேர்க்கப்பட்டும், இ.ம.எண் 42/2011 நாள் 28.10.2011 உத்திரவின்படி மேல்முறையீட்டு வழக்கு திருத்தம் செய்யப்பட்டது.)

1.நாச்சியம்மாள்

2.நடுரான் காளி

3.மாரி

4.சென்றாயன்

5.மனோன்மணி

6.சரத் குமார்

7.காளி .. எதிர்மேல்முறையீட்டாளர்கள்/
வாதி பெரியாண்டியின் வாரிசுதாரர்கள்

(5, 6, 7 எதிர்மேல்முறையீட்டாளர்கள் இ.ம.எண் 5/16 நாள் 26.04.2016ன்படி தரப்பினர்களாக சேர்க்கப்பட்டு, இ.ம.எண் 46/16 நாள் 20.076.2016 உத்திரவின்படி திருத்தம் செய்யப்பட்டது)

இம்மேல்முறையீட்டு வழக்கு திருப்பத்தூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அசல் வழக்கு எண் 443/1994ல் கடந்த 29.09.2009 அன்று வழங்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>விசாரணை நீதிமன்றத்தில்</u>:

பெரியாண்டி .. வாதி

//எதிர்//

பள்ளிக்கூடத்தான் (எ) சென்றாயன் .. பிரதிவாதி

(மேல்முறையீட்டு வழக்கில் குறிப்பிட்டுள்ளபடி)

இம்மேல்முறையீட்டு வழக்கு இந்நீதிமன்றத்தில் 04.01.2010 அன்று தாக்கல் செய்யப்பட்டு வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து பின் கோப்புக்கு எடுக்கப்பட்டு, இரு தரப்பும் கேட்டு இந்நீதிமன்றத்தில் 29.08.2012 அன்று தீர்ப்புரை வழங்கப்பட்டது. மேற்படி தீர்ப்புரையை எதிர்த்து மேல்முறையீட்டாளர் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் S.A. 751/2013 தாக்கல் செய்து, மேற்படி S.A.751/2013 அனுமதிக்கப்பட்டு, இந்நீதிமன்றத்தால் 29.08.2012 அன்று பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையை மாற்றி அமைத்து, இம்மேல்முறையீட்டு வழக்கு 1/2010ஐ மீண்டும் கோப்புக்கு எடுத்து, கூடுதல் சாட்சியம் மற்றும் ஆவணங்களை

ஏற்று இம்மேல்முறையீட்டு வழக்கை முடிக்க உத்திரவிடப்பட்டதன் அடிப்படையில், இவ்வழக்கில் மேல்முறையீட்டாளர்/1ம் பிரதிவாதி தரப்பில் கூடுதல் சாட்சியம் விசாரணை செய்யப்பட்டும், கூடுதல் சான்றாவணம் தாக்கல் செய்யப்பட்டும், எதிர்மேல்முறையீட்டாளர்கள்/வாதிகள் தரப்பில் கூடுதல் சான்றாவணங்கள் தாக்கல் செய்யப்பட்டும், இறுதியாக 14.12.2018 அன்று விசாரணைக்கு வந்தபோது, மேல்முறையீட்டாளர்/ 1ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.எஸ்.எஸ்.மணியன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மேல்முறையீட்டாளர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.கே.ஜி.ஞானசேகரன் அவர்கள் முன்னிலையாகியும், விசாரணை நீதிமன்ற தீர்ப்பும், தீர்ப்பாணையையும், சாட்சிய சான்றாவணங்களையும், இந்நீதிமன்றத்தில் முன்னிடப்பட்டுள்ள கூடுதல் சாட்சிய சான்று ஆவணங்களையும், மேல்முறையீட்டு வழக்கிற்கான காரணங்களை பரிசீலனை செய்தும் இரு தரப்பு வாதத்தை கேட்டும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

## தீர்ப்புரை

திருப்பத்தூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் கடந்த 29.09.2009 அன்று அ.வ.எண் 443/1994 என்ற வழக்கின் 1ம் பிரதிவாதிக்கு எதிராக வழங்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை எதிர்த்து மேற்படி வழக்கின் 1ம் பிரதிவாதி இந்த மேல்முறையீட்டு வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

2.<u>விசாரணை நீதிமன்றத்தில் வாதி தாக்கல் செய்துள்ள திருத்தப்பட்ட வழக்குரையின் சுருக்கம்</u>: வழக்கு சொத்து வாதிக்குப் பாத்தியப்பட்டு, அவரது அனுபவத்தில் இருந்து வந்த சொத்தாகும். வழக்கு சொத்து குறித்து பிரதிவாதி திருப்பத்தூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண் 1213/1986 என்ற வழக்கை வாதிக்கு பாத்தியப்பட்ட சர்வே எண் 309ல் 50 சென்ட் நிலம் இருப்பதாகக் கூறி 07.11.1986 அன்று விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்திருந்தார். மேற்படி வழக்கு விசாரணைக்கு பின் 13.11.1991 அன்று தள்ளுபடி செய்யப்பட்டது. மேற்படி தீர்ப்பினை எதிர்த்து பிரதிவாதி திருப்பத்தூர் சார்பு நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு வழக்கு எண் 4/1992 தாக்கல் செய்து மேற்படி வழக்கும் தள்ளுபடி செய்யப்பட்டது. மேற்படி தீர்ப்பினை எதிர்த்து மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் இரண்டாவது மேல்முறையீடு எஸ்.எ.1602/1992 என்ற வழக்கு தாக்கல் செய்து, மேற்படி வழக்கும் 05.02.1993 அன்று தள்ளபடி செய்யப்பட்டது. எனவே மேற்படி தீர்ப்புகளின் அடிப்படையில் பிரதிவாதிக்கு சர்வே எண் 309ல் 50 சென்ட் நிலம் பாத்தியம் இல்லையென்பதை மனதில் வஞ்சம் வைத்துக்கொண்டு 01.07.1993 அன்று வழக்கு சொத்தில் பிரதிவாதி அக்கிரமாக நுழைந்து ஆக்கிரமிப்பு செய்து காலி செய்ய மறுத்துள்ளார். மேற்படி சங்கதி குறித்து வாதி ஏலகிரி காவல்நிலையத்தில் புகார் கொடுத்தும், பிரதிவாதி வழக்கு சொத்திலிருந்து வெளியேறவில்லை. எனவே விளம்புகை பரிகாரம் கோரி வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். வழக்குரைபடி தீர்ப்பாக வேண்டும்.

3.<u>விசாரணை நீதிம்றத்தில பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையின் சுருக்கம்</u>: வாதியின் வழக்கு பொய், மோசம், சட்டப்படி செல்லாது. வழக்கு சொத்து பிரதிவாதிக்கும், அவரது முன்னோர்களுக்கும் பாத்தியப்பட்டு தொடர்ச்சியாக அவரது சுவாதீனத்தில் இருந்து வந்த என்றும், மேற்படி சொத்து ஏலகிரி மலை தாயலூர் கிராம சர்வே எண் 309 கொண்ட நிலத்தில் ஒரு பகுதி என்றும், வழக்கு சொத்தில் மூன்று கொட்டகைகளும்,

களமும் உள்ளது என்றும், அவை அனைத்தும் பிரதிவாதியின் சுவாதீன அனுபவத்தில் இருந்து வருகிறது என்றும், எந்த காலத்திலும், வாதியோ, அவர்களது முன்னோர்களோ வழக்கு சொத்தை அனுபவித்தது இல்லை என்றும், வழக்கு சொத்து இந்த பிரதிவாதியின் சுவாதீனத்தில் இருப்பதால் அத்துமீறி நுழைய வேண்டிய அவசியம் இல்லையென்றும், வழக்கு சொத்தை இந்த பிரதிவாதியிடமிருந்து அபகரிக்க வேண்டி வாதி பொய்யான காரணங்களை கொண்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றும், வழக்கு சொத்தில் இந்த பிரதிவாதி சுவாதீன அனுபவத்தில் குடியிருந்து வருவதால் காவல்துறையினரிடம் வாதி கொடுத்த புகாரின் அடிப்படையில், வாதிக்கு காவல்துறையினர் புத்திமதி சொல்லி பிரதிவாதியின் சுவாதீனத்தை தடை செய்ய வேண்டாம் என்று அறிவுறுத்திவிட்டனர் என்றும், வாதி, இந்த பிரதிவாதியின் சுவாதீன அனுபவத்திற்கு தடை செய்து வந்ததால், வாதிக்கு எதிராக அ.வ.எண் 1213/1986 வழக்கை தொடர்ந்ததாகவும், மேற்படி வழக்கில் வாதி அத்துமீறல் செய்ததற்குரிய போதிய சாட்சியம் இல்லாததால் வழக்கு இந்த பிரதிவாதிக்கு சாதகமாகவில்லையென்றும், அதன் அடிப்படையில் வழக்கு சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டதாக கருதி, வழக்கு சொத்தை அடைய வேண்டும் என்று உண்மைக்கு மாறாக இந்த வழக்கை வாதி தொடர்ந்துள்ளார் என்றும், வழக்கு சொத்துக்குரிய தீர்வையை செலுத்தி வருவதாகவும், வழக்குரையுடன் முன்னிட்டுள்ள ஆவணங்களின் அடிப்படையில் வழக்கு சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டதல்ல என்றும், எனவே வாதி கோரும் உரிமை விளம்பல் உத்திரவும், சுவாதீனமும் பெற சட்டப்படி இயலாது என்றும், வழக்கு மூலம் பொய் என்றும், வாதி காவல்துறையினரிடம் அளித்த புகார் உண்மை இல்லாததால் அதனை காவல்துறையினர் ஏற்றுக்கொள்ளாமல் நிராகரித்துவிட்டனர் என்றும், மேற்படி சங்கதியை வாதி வழக்குரையில் மறைத்துள்ளார் என்றும், எனவே வழக்கை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

4.வாதியின் வழக்குரை, பிரதிவாதியின் எதிர்வழக்குரை ஆகியவைகளின் அடிப்படையில் வழக்கில் தீர்வு காண்பதற்கு விசாரணை நீதிமன்றத்தில் கீழ்க்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளன.

1.வாதிக்கு சுவாதீன பரிகாரம் கிடைக்கக்கூடியதா?

2.வாதிக்கு கிடைக்கக்கூடிய பரிகாரம் என்ன?

5.விசாரணை நீதிமன்றத்தில் வாதி தரப்பில், வா.சா.1 மற்றும் வா.சா.2 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பிரதிவாதி தரப்பில் பி.வா.சா.1 முதல் பி.வா.சா.3 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.23 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

6.இரு தரப்பு வழக்கு விவரங்களையும், சாட்சிய சான்றாவணங்களையும், விசாரணை நீதிமன்றம் பரிசீலித்து, தாவாவை அனுமதித்து தீர்ப்பு வழங்கியுள்ளது. அவ்வாறு தாவாவை அனுமதித்து வழங்கிய தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையில் மனக்குறையுற்ற பிரதிவாதி இந்த மேல்முறையீட்டு வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

7.<u>மேல்முறையீட்டாளர் தரப்பில் தாக்கல் செய்துள்ள மேல்முறையீட்டு மனுவின் சுருக்கம்</u>:

விசாரணை நீதிமன்ற தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை சட்டத்திற்கு முரணானது ஆகும். விசாரணை நீதிமன்றம் தாவாவை தள்ளுபடி செய்து தீர்ப்பு வழங்கியிருக்க வேண்டும். மாறாக அனுமதித்து தீர்ப்பு வழங்கியிருப்பது சட்டத்திற்கு முரணானதாகும். விசாரணை நீதிமன்றம் பிரதிவாதி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை முறையாக பரிசீலனை செய்யவில்லை.

விசாரணை நீதிமன்றத்தில் தீர்ப்பாணை பிறப்பிப்பதற்கு முன்பே வாதி பெரியாண்டி 24.12.2009 அன்று இறந்துவிட்டதால், அவரது மனைவியாக 1ம் எதிர்மேல்முறையீட்டாளர் மற்றும் 2 முதல் 4 எதிர்மேல்முறையீட்டாளர்கள் மேற்படி வாதி பெரியாண்டியின் மகன் மற்றும் மகள் வாரிசுகளாக சேர்க்கப்பட்டுள்ளனர். விசாரணை நீதிமன்றம் வா.சா.1ன் சாட்சியத்தை மட்டுமே பரிசீலனை செய்து தீர்ப்பு வழங்கியிருப்பது சரியல்ல. பிரதிவாதிதான் வழக்கு சொத்து குறித்து அவரது வாய் மொழி மற்றும் ஆவண சாட்சியங்கள் மூலம் நிரூபித்துள்ளார் என்பதை விசாரணை நீதிமன்றம் கவனத்தில் கொள்ளவில்லை. வாதி பெரியாண்டியின் வாரிசுகள் வழக்கு சொத்தின் சுவாதீன அனுபவத்தில் ஒரு போதும் இருந்ததில்லையென்பதை விசாரணை நீதிமன்றம் கவனிக்க தவறியுள்ளது. விசாரணை நீதிமன்றம் வாதியின் வழக்கு காலவரையறையை கடந்துவிட்டது என்பதையும், வழக்கு சொத்தில் மேல்முறையீட்டாளர்/பிரதிவாதிக்கு எதிரிடை அனுபவ உரிமை ஏற்பட்டுள்ளது என்பதையும் கவனிக்க தவறியுள்ளது. வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள காவல்நிலையத்தில் கொடுக்கப்பட்ட புகாரின் நகல் அத்துமீறலை நிரூபிக்க போதுமானது என்று விசாரணை நீதிமன்றம் தவறாக முடிவு செய்துள்ளது. மேற்படி புகாரை மட்டும்தான் வாதி சுவாதீனத்தை நிரூபிக்க தாக்கல் செய்துள்ளார் என்பதை விசாரணை நீதிமன்றம் கவனிக்க தவறியுள்ளது. வாதியின் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களின் நிறைவேற்றத்தை வாதி நிரூபிக்கவில்லை. மேற்படி சங்கதிகளை நிரூபிக்க விசாரணை நீதிமன்றம் தவறியுள்ளது. ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது என்பது மட்டுமே ஆவணங்கள் நிரூபிக்கப்பட்டுள்ளது என கருத இயலாது என மேற்கோள் காட்டப்பட்ட முன்னோடி தீர்ப்புகளை விசாரணை நீதிமன்றம் கவனத்தில் கொள்ளவில்லை. வழக்கு சொத்தை பொறுத்து உரிமைமூலம் வாதியால் நிரூபிக்கப்படவில்லையென்பதை விசாரணை நீதிமன்றம் குறிப்பிட்டிருக்க வேண்டும். முந்தைய வழக்கு நடவடிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து விவரத்தின் நான்கு எல்லைகளும், தற்போதைய வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து விவரத்தின் நான்கு எல்லைகளும் வெவ்வேறானவை என்பதை விசாரணை நீதிமன்றம் கவனிக்க தவறியுள்ளது. பிரதிவாதியின் தரப்பில் செய்யப்பட்ட வாதுரைகளை கருத்தில் கொள்ளாமல் அதனை புறக்கணித்துவிட்டு வாதியின் வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியங்களை மட்டும் நம்புவதாக விசாரணை நீதிமன்றம் தவறாக தெரிவித்துள்ளது. வாதியால் வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள வழக்கு மூலம் நிரூபிக்கப்படவில்லையென்பதையும், வழக்கு மூலம் பொருண்மைகளின் தொகுப்பு என்பதையும், வழக்கு சொத்தில் மேல்முறையீட்டாளர்/பிரதிவாதி அத்துமீறி நுழையவில்லையென்பதையும், அவ்விதம் அத்துமீறி நுழைந்தார் என்பதும் விசாரணை நீதிமன்றத்தால் கவனத்தில் கொள்ளப்படவில்லை. பிரதிவாதியின் வழக்கின் குறைபாடுகளையும், பிரதிவாதி தரப்பில் உள்ள சாட்சிய சான்றாவண குறைபாடுகளையும் வைத்துக்கொண்டு வாதி வழக்கை நிரூபித்துள்ளார் என்று விசாரணை நீதிமன்றம் முடிவு செய்து வாதிக்கு வழங்கப்பட்ட விளம்புகை பரிகாரம் தவறானதாகும். ஏற்றுக்கொண்ட சங்கதிகளை நிரூபிக்க வேண்டிய அவசியம் இல்லை. அந்த சங்கதிகளை ஏற்றுக்கொண்ட நபர்கள்தான் தான் ஏற்றுக்கொள்ளவில்லையென்று நிரூபிக்க வேண்டும். அவ்விதம் நிரூபிக்காதபட்சத்தில் ஏற்றுக்கொண்ட சங்கதிகள் நிரூபிக்கப்பட்டதாக கருத்தில் கொள்ள வேண்டும் என்பதை விசாரணை நீதிமன்றம் கவனத்தில் கொள்ளவில்லை. விசாரணை நீதிமன்றத்தால் சரியான வகையில் எழுவினாக்கள் வனையப்படவில்லை. மேற்படி எழுவினாக்களை சரியான வகையில் பரிசீலனை செய்து சரியான தீர்ப்பு வழங்கப்படவில்லை. இவ்வழக்கினை வாதி நிருபக்க

வேண்டிய கடமை கொண்டிருந்தும் வாதி முறையாக நிரூபிக்கவில்லை. அனுமானம் மற்றும் நிகழ் தகவுகளின் அடிப்படையில் வழக்கை நிரூபிக்க வேண்டிய கடமை மேல்முறையீட்டாளர்/பிரதிவாதியை சேர்ந்தது என்று முடிவு செய்திருப்பது ஏற்புடையதல்ல. விசாரணை நீதிமன்றம் முறையாக சாட்சிய சான்றாவணங்களை பரிசீலனை செய்து தீர்ப்பு வழங்கவில்லை. எனவே மேற்கண்ட காரணங்களுக்காக வேண்டி விசாரணை நீதிமன்ற அ.வ.எண் 443/1994ல் கடந்த 29.09.2009 அன்று வழங்கிய தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை ரத்து செய்து, இம்மேல்முறையீட்டு வழக்கை அனுமதிக்க வேண்டும்.

8.இம்மேல்முறையீட்டு வழக்கில் ஏற்கனவே இரு தரப்பு வாதங்களை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்த இந்நீதிமன்றம் மேல்முறையீட்டு வழக்கை தள்ளுபடி செய்து, விசாரணை நீதிமன்றத்தில் அ.வ.எண் 443/1994ல் கடந்த 29.09.2009 அன்று பிறப்பித்த தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை மாற்றி அமைத்து கடந்த 29.08.2012 அன்று தீர்ப்பளித்துள்ளது. மேற்படி தீர்ப்பினை எதிர்த்து மேல்முறையீட்டாளர் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் S.A 751/2013 தாக்கல் செய்து, மேற்படி S.A.751/2013 அனுமதிக்கப்பட்டு, இந்நீதிமன்றத்தால் 29.08.2012 அன்று பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையை மாற்றி அமைத்து, இம்மேல்முறையீட்டு வழக்கு 1/2010ஐ மீண்டும் கோப்புக்கு எடுத்து, கூடுதல் சாட்சியம் மற்றும் ஆவணங்களை ஏற்று இம்மேல்முறையீட்டு வழக்கை முடிக்க உத்திரவிடப்பட்டுள்ளது.

9.எனவே, இவ்வழக்கில் மேல்முறையீட்டாளர் தரப்பில் கூடுதல் சாட்சியமாக ஒரு திருமலை என்பவர் விசாரக்கப்பட்டடுள்ளார். விசாரணை நீதிமன்றத்தில் பிரதிவாதி தரப்பில் 3 சாட்சிகள் பி.வா.சா.1 முதல் பி.வா.சா.3 வரையில் விசாரிக்கப்பட்ட காரணத்தினால் இம்மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்ட திருமலை பி.வா.சா.4 ஆக விசாரிக்கப்பட்டதாக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி அசல் வழக்கில் பிரதிவாதி தரப்பில் ஏற்கனவே பி.வா.சா.ஆ.1 முதல் பி.வ.சா.ஆ.23 வரையிலான ஆவணங்கள் விசாரணை நீதிமன்றத்தால் குறியீடு செய்யப்பட்டுவிட்ட காரணத்தினால் இம்மேல்முறையீட்டு வழக்கில் மேல்முறையீட்டாளர்/பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்ட ஆவணமானது பி.வா.சா.ஆ.24 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மேல்முறையீட்டாளர்கள் தரப்பில் ஏற்கனவே விசாரணை நீதிமன்றத்தில் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்ட சென்றாயனால் கூடுதல் முதல் விசாரணை பிரமாண பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. விசாரணை நீதிமன்றத்தில் மேற்படி எதிர்மேல்முறையீட்டாளர்கள் தரப்பில் ஏற்கனவே வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டிருந்த காரணத்தினால் தற்போது தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் தொடர்ந்து வா.சா.ஆ.10 முதல் வா.சா.ஆ.21 வரையிலான சான்றாவணங்களாக குறியீடு செய்யப்பட்டது.

10.இம்மேல்முறையீட்டில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினைகள்:

**1.வழக்கு சொத்தில் மேல்முறையீட்டாளர்/1ம் பிரதிவாதி சுவாதீனத்தில் உள்ளார் என்பது சரியா?**

**2.வழக்கு சொத்தில் மேல்முறையீட்டாளர்/1ம் பிரதிவாதி சுவாதீனத்தில் உள்ளார் என்பது 1ம் வாதியால் முந்தைய வழக்கு நடவடிக்கைகளில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என்பது சரியா?**

**3.வழக்கு சொத்து மேல்முறையீட்டாளர்/1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது**

**என்பது சரியா? அல்லது வழக்கு சொத்து 1ம் எதிர்மேல்முறையீட்டாளர்/1ம் வாதி, அவரது வாரிசுகளுக்கு பாத்தியப்பட்டது என்பது சரியா?**

**4.வழக்கு சொத்தில் 1ம் வாதி மற்றும் அவரது வாரிசுகளான எதிர்மேல்முறையீட்டாளர்கள் எக்காலத்திலும் சுவாதீனத்தில் இல்லை என்பது சரியா?**

**5.வழக்கு சொத்தை பொறுத்து எதிர்மேல்முறையீட்டாளர்கள்/1ம் வாதி மற்றும் அவரது வாரிசுகளான இதர வாதிகள் கோரும் விளம்புகை மற்றும் சுவாதீன பரிகாரம் மேற்படி எதிர்மேல்முறையீட்டாளுக்கு கிடைக்கத்தக்கதா?**

**6.மேல்முறையீட்டாளர்/பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மேல்முறையீட்டு வழக்கு அனுமதிக்கத்தக்கதா?**

**7.விசாரணை நீதிமன்ற அ.வ.எண் 443/1994ல் கடந்த 29.09.2009 அன்று திருப்பத்தூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழங்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை ரத்து செய்யத்தக்கதா?**

**8.தரப்பினர்களுக்கு கிடைக்க வேண்டிய இதர பரிகாரங்கள் என்ன?**

11.<u>பிரச்சினை 3:</u> இம்மேல்முறையீட்டு வழக்கானது திருப்பத்தூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் நடைபெற்று வந்த அ.வ.எண் 443/1994ல் கடந்த 29.09.2009 அன்று ஏற்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை ரத்து செய்வதற்காக 1ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. விசாரணை நீதிமன்றத்தில் இரு தரப்பு வாய் மொழி மற்றும் ஆவண சாட்சியங்களை பரிசீலனை செய்த விசாரணை நீதிமன்றம் எதிர்மேல்முறையீட்டாளர்கள்/வாதிகள் கோரியபடி விளம்புகை மற்றும் சுவாதீன பரிகாபரத்தை வாதிகளுக்கு வழங்கி மேற்படி அ.வ.எண் 443/1994 வழக்கை 29.09.2009ல் அனுமதித்து தீர்ப்பளித்துள்ளது. மேற்படி தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை எதிர்த்து மேற்படி அசல் வழக்கின் 1ம் பிரதிவாதியால் இம்மேல்முறையீட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள காரணத்தினால் இனி வரும் பத்திகளில் மேல்முறையீட்டாளரை 1ம் பிரதிவாதி என்றும், எதிர்மேல்முறையீட்டாளர்களை வாதிகள் என்றும் குறிப்பிடப்படுவார்கள். தேவை ஏற்படும் இடங்களில் மேல்முறையீட்டாளர் மற்றும் எதிர்மேல்முறையீட்டாளர்கள்கள் என்று தனித்தனியாக குறிப்பிடப்படுவார்கள்.

12.மேற்படி அசல் வழக்கானது முதலில் 1ம் வாதியால் பிரதிவாதிக்கு எதிராக வழக்கு சொத்தை பொறுத்து சுவாதீன பரிகாரம் மட்டும் கோரி தாக்கல் செய்யப்பட்டு, பின்னிட்டு பிரதிவாதி பதிலுரை தாக்கல் செய்யததன் அடிப்படையில் வழக்கு சொத்தினை பொறுத்து விளம்புகை பரிகாரமும் கோரி வழக்கு பிராதானது திருத்தம் செய்யப்பட்டுள்ளது. மேலும் வழக்கு நிலுவையில் இருந்த சமயத்தில் 1ம் வாதி பெரியாண்டி இறந்துவிட்ட காரணத்தினால் அவரது சில வாரிசுகள் 2 முதல் 4 வாதிகளாக சேர்க்கப்பட்டுள்ளார்கள். அதேபோன்று பெரியாண்டியின் இதர வாரிசுகள் 2 முதல் 4 பிரதிவாதிகளாக சேர்க்கப்பட்டுள்ளார்கள். மேற்படி வழக்கிலும் வாதிகள் தரப்பில் வா.சா.1 ஆக விசாரித்துக்கொண்ட 2ம் வாதி சென்றாயன் தன்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திலும் வழக்கு சொத்து தன்னுடைய தகப்பனார் 1ம் வாதிக்கு பாத்தியப்பட்டது என்றும், அவருக்கு கண் பார்வை மங்கலாக உள்ள காரணத்தினாலும், காது கேட்காத நிலையில் 100 வயதை கடந்து, நடக்க இயலாத நிலையில்

உள்ள காரணத்தினாலும் இவ்வழக்கில் ஆஜராகி சாட்சியமளிக்க இயலவில்லையென்றும், இவ்வழக்கு விவரங்கள் தனக்கு நன்கு தெரியும் என்றும், ஏலகிரி மலை தாயலூர் கிராம சர்வே எண் 309ன் மொத்த வஸ்தீரணம் 10 ஏக்கர் என்றும், மேற்படி 10 ஏக்கரில் உள்ள 33 செண்ட் நிலம்தான் இவ்வழக்கு சொத்து என்றும், 33 செண்ட் சொத்தில் மூன்று கொட்டகைகளும், களமும் உள்ளது என்றும், அதனை 1ம் வாதி அனுபவம் செய்து வந்ததாகவும், இந்நிலையில் 1ம் வாதிக்குப் பாத்தியப்பட்ட சர்வே எண் 309ல் உள்ள 10 ஏக்கர் சொத்தில் ஒரு பகுதி சொத்தாக 50 செண்ட் நிலத்திற்கு உரிமை கோரி 1ம் வாதியின் மீது 1ம் பிரதிவாதி அ.வ.எண் 1213/86 என்ற வழக்கை ஏற்கனவே தாக்கல் செய்திருந்ததில் மேற்படி வழக்கானது 13.11.1991 அன்று முழு விசாரணைக்கு பின்னிட்டு தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றும், அதனை எதிர்த்து தாக்கல் செய்யபட்ட மே.மு.எண் 4/92 வழக்கும் 28.08.1992ல் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றும், அதனை எதிர்த்து தாக்கல் செய்திருந்த இரண்டாவது

மேல்முறையீட்டு வழக்கான S.A 1602/93 வழக்கும், 05.02.1993ல் சென்னை உயர்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றும், மேற்படி வழக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள வழக்கு சொத்து அந்த வழக்குகளின் வாதியும், இந்த வழக்கின் 1ம் பிரதிவாதியுமான பள்ளிக்கூடத்தான் (எ) சென்றாயனுக்கு 50 செண்ட் நிலம் பாத்தியப்பட்டதல்ல என்றும், அதில் அவர் சுவாதீனத்திலும் இல்லையென்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்படி 50 செண்ட் நிலத்தின் ஒரு பகுதி சொத்துதான் இவ்வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள 33 செண்ட் சொத்து என்றும், மேற்படி 33 செண்ட் சொத்து 1ம் வாதியின் சுவாதீனத்தில் இருந்து வந்ததில் கடந்த 01.07.1993 அன்று 1ம் பிரதிவாதி அத்துமீறி நுழைந்து ஆக்கிரமிப்பு செய்துக்கொண்ட காரணத்தினால் இது சம்மந்தமாக ஏலகிரிமலை காவல்நிலையத்தில் 1ம் வாதி புகார் கொடுத்திருப்பதாகவும், காவல்துறையினர் அறிவுறுத்தியும் 1ம் பிரதிவாதி வழக்கு சொத்தின் சுவாதீனத்தை 1ம் வாதியிடம் ஒப்படைக்காத காரணத்தினால் இவ்வழக்கை தாக்கல் செய்ய நேர்ந்துள்ளது என்றும் தெரிவித்துள்ளார். மேற்படி வாதிகளின் கட்சியை நிரூபிக்கும் விதமாக ஒரு பிரகலநாதன் என்பவர் வா.சா.2 ஆக விசரிக்கப்பட்டுள்ளார்.

13. மேற்படி வழக்கில் ஆஜரான 1ம் பிரதிவாதி தன்னுடைய பதிலுரையிலும், முதல் விசாரணை சாட்சியத்திலும் வழக்கு சொத்து 1ம் பிரதிவாதியின் முன்னோர்களுக்கு பாத்தியப்பட்டு, வழக்கு சொத்தில் தற்போது 1ம் பிரதிவாதிதான் சுவாதீனத்தில் இருந்து வருகிறார் என்றும், வழக்கு சொத்தில் மூன்று கொட்டகைகளும், களமும் உள்ளது என்றும், அவை 1ம் பிரதிவாதியின் சுவாதீனத்தில்தான் இருந்து வருகிறது என்றும், எனவே வழக்கு சொத்தில் 1ம் வாதி எப்போதும் சுவாதீனத்தில் இருந்ததில்லையென்றும், அதன் காரணமாக வழக்கு சொத்தில் 1ம் பிரதிவாதி அத்துமீறி நுழைய வேண்டிய அவசியம் இல்லையென்றும், வழக்கு சொத்தை பொறுத்து 1ம் பிரதிவாதி அ.வ.எண் 1213/1986 என்ற வழக்கை தாக்கல் செய்திருந்ததில் அதில் போதிய சாட்சியம் இல்லாத காரணத்தினால் 1ம் பிரதிவாதிக்கு சாதகமாக வழக்கு முடிவடையவில்லையென்றும், வழக்கு சொத்திற்கு பட்டாவும் கூட்டாக உள்ளது என்றும், வழக்கு சொத்திற்கான தீர்வையும் 1ம் பிரதிவாதி செலுத்தி வருவதாகவும், வழக்கு சொத்தை எவருடைய தடையும் இன்றி வெளிப்படையாக சட்ட வரம்பு காலத்திற்கு மேல் அனுபவித்து வருகின்ற காரணத்தினால் வழக்கு சொத்து 1ம் பிரதிவாதிக்குதான் பாத்தியப்பட்டது என்றும், 01.07.1993ல் 1ம் பிரதிவாதி வழக்கு சொத்தில் அத்துமீறி நுழைந்துகொண்டார் என்பது தவறு

என்றும், வழக்கு சொத்தில் 1ம் பிரதிவாதி சுவாதீனத்தில் உள்ளார் என்பதை முந்தைய வழக்கு நடவடிக்கைகளில் 1ம் வாதி பெரியாண்டி ஏற்றுக்கொண்ட காரணத்தினால் இவ்வழக்கில் சாட்சியம் அளிக்காமல் தவிர்த்துள்ளார் என்றும், எனவே வாதிகளின் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று தெரிவித்துள்ளார். மேற்படி பிரதிவாதியின் கட்சியை நிருபிக்கும்விதமாக ஒரு வாத்தியார் காளி பி.வா.சா.2 ஆகவும், ஒரு ஆண்டி பி.வா.சா.3 ஆகவும் விசாரணை நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டும், திருப்பத்தூர் வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்தை சேர்ந்த அலுவலர் இம்மேல்முறையீட்டு வழக்கில் பி.வா.சா.4 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளார்கள்.

14.மேற்படி வாதிகளுக்கும், 1ம் பிரதிவாதிக்கும் இடையே உள்ள பிரச்சினையானது ஏலகிரிமலை தாயலூர் கிராம சர்வே எண் 309ல் உள்ள 33 சென்ட் நிலத்தை பொறுத்தது என்பது இரு தரப்பிலும் முன்னிடப்பட்டுள்ள வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியங்களின் அடிப்படையில் தெரிந்துக்கொள்ள முடிகின்றது. மேற்படி சர்வே எண் 309ன் மொத்த விஸ்தீரணம் 10 எக்கர் என்பதும் இரு தரப்பிலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. மேற்படி சர்வே எண் 309ல் இருந்த மொத்த விஸ்தீரணம் 10 ஏக்கரில் **இவ்வழக்கு 1ம் பிரதிவாதியின் நிலத்திற்கு வடக்கும் கிழக்கும் இவ்வழக்கு 1ம் வாதியின் நிலத்திற்கு தெற்கும் கிழக்கும் என செக்குபந்தி குறிப்பிடப்பட்டு, இதற்கு மத்தியில் உள்ள 50 சென்ட் நிலத்தை பொறுத்து** ஏற்கனவே இவ்வழக்கின் 1ம் பிரதிவாதி விளம்புகை மற்றும் அதன் தொடர்ச்சியான நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி திருப்பத்தூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண் 1213/86 என்ற வழக்கினை தாக்கல் செய்து மேற்படி நான்கு எல்லைகளுக்குள் உள்ள 50 சென்ட் நிலம் இவ்வழக்கின் 1ம் பிரதிவாதியும், அ.வ.எண் 1213/86 வழக்கின் வாதியுமான பள்ளிக்கூடத்தான் (எ) சென்றாயனுக்கு பாத்தியப்பட்டதல்ல என்றும், மேற்படி 50 சென்ட் நிலத்தில் மேற்படி பள்ளிக்கூடத்தான் (எ) சென்றாயன் சுவாதீனத்தில் இல்லையென்று தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை கடந்த 13.11.1991ல் வழங்கப்பட்டுள்ளது என்பதை இவ்வழக்கின் வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.7 ஆவணங்களானது வெளிப்படுத்துகின்றது. மேற்படி அ.வ.எண் 1213/86 வழக்கில் இவ்வழக்கு 1ம் பிரதிவாதி பள்ளிக்கூடத்தான் (எ) சென்றாயனுக்கு எதிராக வழங்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை எதிர்தது மே.மு.எண் 4/92 என்ற மேல்முறையீட்டு வழக்கினை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்ததில் மேற்படி மேல்முறையீட்டு நீதிமன்றமான இந்நீதிமன்றம் சர்வே எண் 309ல் அ.வ.எண் 1213/86 வழக்கில் இவ்வழக்கின் 1ம் பிரதிவாதி பள்ளிக்கூடத்தான் (எ) சென்றாயனால் குறிப்பிடப்படும் வழக்கு சொத்து அவருக்கு பாத்தியப்பட்டதல்ல என்றும், மேற்படி வழக்கு சொத்தில் பள்ளிக்கூடத்தான் (எ) சென்றாயன் சுவாதீனத்தில் இல்லையென்றும் மேல்முறையீட்டு வழக்கில் கடந்த 05.02.1993ல் முதல் மேல்முறையீட்டு நீதிமன்றமான இந்நீதிமன்றம் தள்ளுபடி செய்து தீர்ப்பளித்துள்ளது என்பதை வாதிகளின் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.6 ஆவணங்கள் வெளிப்படுத்துகின்றது. மேற்படி முதல் மேல்முறையீட்டு நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை எதிர்த்து இவ்வழக்கின் 1ம் பிரதிவாதியான பள்ளிக்கூடத்தான் (எ) சென்றாயன் S.A 1602/92 என்ற இரண்டாவது மேல்முறையீட்டு வழக்கினை தாக்கல் செய்திருந்ததில் மேற்படி இரண்டாவது மேல்முறையீட்டு நீதிமன்றமான மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றமும் ஏலகிரிமலை தாயலூர் கிராம சர்வே எண் 309ல் குறிப்பிடப்பட்ட நான்கு எல்லைகளுக்குள் உள்ள 50 சென்ட் நிலம் இவ்வழக்கின் 1ம்

பிரதிவாதியான பள்ளிக்கூடத்தான் (எ) சென்றாயனுக்கு பாத்தியப்பட்டதல்ல என்றும், மேற்படி சொத்தில் பள்ளிக்கூடத்தான் (எ) சென்றாயன் சுவாதீனத்திலும் இல்லையென்று முடிவு செய்து கடந்த 05.02.1993ல் இவ்வழக்கு 1ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்ட இரண்டாவது மேல்முறையீட்டு வழக்கை தள்ளுபடி செய்து தீர்ப்பளித்துள்ளது. எனவே மேற்படி வா.சா.ஆ.1, வா.சா.ஆ.7, வா.சா.ஆ.2, வா.சா.ஆ.6 மற்றும் வா.சா.ஆ.3 ஆவணங்களின் அடிப்படைக்கு இவ்வழக்கின் 1ம் பிரதிவாதி பள்ளிக்கூடத்தான் (எ) சென்றாயனுக்கு ஏலகிரிமலை தாயலூர் கிராம சர்வே எண் 309ல் 50 சென்ட் நிலம் பாத்தியப்பட்டதல்ல என்றும், மேற்படி 50 சென்ட் நிலத்தில் அவர் சுவாதீனத்திலும் இல்லையென்றும் இதற்கு முந்தைய வழக்கு நடவடிக்கைகளில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் வரை முடிவு செய்யப்பட்டுள்ளது என்று தெளிவாகின்றது.

15.மேற்படி பி.வா.சா.1 ஆக பள்ளிக்கூடத்தான் (எ) சென்றாயன் தன்னுடைய குறுக்கு விசாரணை சாட்சியத்தில் **"வழக்கு சொத்தான 33 சென்ட் சொத்திற்கு கிழக்கிலும் தெற்கிலும் என் தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட சொத்து இருந்தது என்றால் சரிதான். என் தகப்பனார் சொத்தின் சர்வே எண் 310 மற்றும் 302 என்றால் இல்லை. அந்த சொத்தின் சர்வே எண் 309 ஆகும். 33 சென்ட் சொத்திற்கு கிழக்கில் உள்ள சொத்தின் சர்வே எண் என்ன என்றால் 310 ஆகும். சர்வே எண் 310ல் என் தகப்பனாருக்கு பாகமாக வந்த சொத்தின் விஸ்தீரணம் 9 ஏக்கர் என்றால் சரிதான். சர்வே எண் 302ல் என் தகப்பனார் 7 ஏக்கர் சொத்தை கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான்"** என்றும், **"பெரியாண்டியின் முதல் மனைவி மூலமாக பிறந்த ஆண்டிக்கு 10 ஏக்கரா சர்வே எண் 309ல் பாகம் வந்தது. அதில் 50 சென்ட் எங்களுக்கு பாகமாக வந்தாகும்" என்றும் "சர்வே எண் 309ல் எனக்கு சேர வேண்டிய 50 சென்ட் குறித்து தனியாக விளம்புகை கோரியும் வழக்கு தாக்கல் செய்திருந்தேன். ஒ.எஸ்.1213/86 என்றால் சரிதான். நான் போட்ட அந்த 50 சென்ட் நிலத்தைதான் தற்போது ஒரு பாகமாக 33 சென்ட் நிலத்தை வாதி இவ்வழக்கில் போட்டுள்ளார் என்றால் சரிதான்"**_ என்றும் **"நான் 50 சென்ட் கோரி தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடியாகிவிட்டது என்றால் சரிதான்"** என்றும் தெளிவாக ஏற்றுக்கொண்டு சாட்சியமளித்துள்ளார். எனவே இதற்கு முந்தைய வழக்கு நடவடிக்கைகளில் இவ்வழக்கின் 1ம் பிரதிவாதி பள்ளிக்கூடத்தான் (எ) சென்றாயன் தனக்கு பாத்தியப்பட்டது எனறு குறிப்பிட்டுள்ள 50 சென்ட் நிலத்தின் ஒரு பகுதி சொத்துதான் இவ்வழக்கு சொத்து என்று ஏற்றுக்கொண்டுள்ள காரணத்தினால் ஏற்கனவே மேற்படி இவ்வழக்கு சொத்து உள்ளடக்கிய 50 சென்ட் நிலமானது இவ்வழக்கின் 1ம் பிரதிவாதி பள்ளிக்கூடத்தான் (எ) சென்றாயனுக்கு பாத்திப்பட்டது அல்ல என்றும், அவருடைய சுவாதீனத்தில் இல்லையென்றும் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் வரை வழக்குகள் அவருக்கு எதிராக முடிவு செய்யப்பட்டுள்ள சூழ்நிலையில் அதே சொத்தில் தான் சுவாதீனத்தில் இருப்பதாகவும், அது தனக்கு பாத்தியப்பட்டது என்றும் அவரால் இவ்வழக்கில் செய்யப்படும் கட்சியானது ஏற்புடையதல்ல. மேலும் 1ம் பிரதிவாதி தரப்பில் வாதிட்ட வழக்கறிஞர் அ.வ.எண் 1213/86 வழக்கு சொத்தும், இவ்வழக்கு சொத்தும் வெவ்வேறானது என்றும், செக்குபந்திகள் வெவ்வேறானது என்றும் வாதிட்டார். ஆனால் மேற்படி இரண்டு வழக்குகளின் சொத்திற்கு குறிப்பிட்டுள்ள நான்கு எல்லைகள் அந்தந்த வழக்கிற்கு ஏற்ற வகையில் வாதி, பிரதிவாதிகள் நிலம் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே அ.வ.எண் 1213/86 வழக்கு சொத்தும், இவ்வழக்கு சொத்தும்

வெவ்வேறானவை என மேல்முறையீட்டாளர்/1ம் பிரதிவாதி தரப்பில் தெரிவிக்கப்படும் வாதம் ஏற்புடையதல்ல. ஏலகிரிமலை தாயலூர் கிராம சர்வே எண் 309ல் 10 ஏக்கர் சொத்தானது இவ்வழக்கின் 1ம் வாதிக்கு பாகமாக ஒதுக்கப்பட்டது என்று வாதிகளின் தரப்பில் கட்சி செய்யப்பட்டு வந்தபோதிலும் அதனை இவ்வழக்கின் 1ம் பிரதிவாதி பள்ளிக்கூடத்தான் (எ) சென்றாயன் மறுத்து அதில் 50சென்ட் நிலம் தன்னுடைய முன்னோர்களுக்கு பாகமாக வந்தததாக தெரிவித்துள்ளார். ஆனால் வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.10 முதல் வா.சா.ஆ.13 வரையிலான ஆவணங்கள் தாயலூர் கிராம சர்வே எண் 309ல் உள்ள 10 ஏக்கர் நிலத்தை பொறுத்து 1ம் வாதிக்கு மட்டுமே தொடர்பு இருப்பதாக வெளிப்படுத்துகின்றது. மேலும் வாதிகளின் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.15 ஆவணமானது ஏற்கனவே இந்த வழக்கின் 1ம் பிரதிவாதியான பள்ளிக்கூடத்தான் (எ) சென்றாயன் 2ம் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டும் அவரது ஒரு சகோதரர் 3ம் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டும், அவரது தகப்பானர் 1ம் பிரதிவாதியாக குறிப்பிடப்பட்டும் பள்ளிக்கூடத்தான் (எ) சென்றாயனின் மற்றொரு சகோதரர் பெரிய சென்றாயனால் 1ம் பிரதிவாதியின் குடும்பத்தினருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை பொறுத்து பாகப்பிரிவினை மற்றும் தனிச்சுவாதீனம் பரிகாரம் கோரி இந்நீதிமன்றத்தில் அ.வ.எண் 1/86 என்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதை வெளிப்படுத்துகின்றது. மேற்படி அ.வ.எண் 1/86 வழக்கின் சொத்து விரவமாக தாயலூர் கிராம சர்வே எண்கள் 310 மற்றும் 302 மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் தாயலூர் கிராம சர்வே எண் 309ல் 50 சென்ட் நிலம் 1ம் பிரதிவாதியின் குடும்பத்தினருக்கு பாத்தியப்பட்டதாக அவரது சகோதரரால் குறிப்பிடப்படவில்லை. மேற்படி அ.வ.எண் 1/86 வழக்கின் 2ம் பிரதிவாதியும், இவ்வழக்கின் 1ம் பிரதிவாதியுமான பள்ளிக்கூடத்தான் (எ) சென்றாயனாலும், அவரது தகப்பனார் மற்றும் ஒரு சகோதரராலும் தாக்கல் செய்யப்பட்டிருந்த பதிலுரையில் தாயலூர் கிராம சர்வே எண் 302 மற்றும் 310ஐ பொறுத்து ஏற்கனவே தங்கள் குடும்பத்தினர்களுக்குள் பாகப்பிரிவினை நடைபெற்றுவிட்டதாகவும், எனவே மீண்டும் ஒரு முறை பாகப்பிரிவினை கோரி பெரிய சென்றாயனால் தாக்கல் செய்யப்பட்ட அ.வ.எண் 1/86 வழக்கு நிலைக்கக்கூடியதல்ல என்றும் தெரிவித்துள்ளார்கள் என்பதை வா.சா.ஆ.14 ஆவணமானது வெளிப்படுத்துகின்றது. மேற்படி வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பதிலுரையிலும் இவ்வழக்கின் 1ம் பிரதிவாதி தங்கள் குடும்பத்திற்கு தாயலூர் கிராம சர்வே எண் 309ல் 50 சென்ட் நிலம் பாகமாக ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் அந்த சொத்து அ.வ.எண் 1/86 வழக்கில் சேர்க்கப்படவில்லை என்றும் யாதொரு சங்கதியும் தெரிவக்கவில்லை என்பது புலனாகின்றது. எனவே 1ம் பிரதிவாதியும், அவரது சகேதாரர்களும், அவரது தகப்பனாரும் அவர்கள் குடும்ப சொத்துக்களை பொறுத்து நடத்தி வந்த அ.வ. 1/86 வழக்கில் தங்கள் குடும்பத்திற்கு சர்வே எண் 309ல் 50 சென்ட் நிலம் பாத்தியப்பட்டுள்ளது என்று தெரிவிக்காத நிலையில் இவ்வழக்கின் 1ம் பிரதிவாதி வருவாய் துறையினரால் அவர் பெயருக்கு வழங்கப்பட்ட பி.வா.சா.ஆ.24 ஆவணத்தினை அனுசரனையாக கொண்டு வழக்கு சொத்து தங்கள் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட சொத்து என தவறான உரிமை கோருகிறார் என்பது தெளிவாக தெரிய வருகிறது.

16.இவ்வழக்கில் 1ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள கந்தாய வரி ரசீதுகள் மற்றும் பி.வா.சா.ஆ.24 ஆவணத்தை ஒத்த ஆவணங்கள் ஏற்கனவே இவ்வழக்கு

1ம் பிரதிவாதியால் ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்ட அ.வ.எண் 1213/86 வழக்கிலும் தாக்கல் செய்யப்பட்டு மேற்படி ஆவணங்களின் அடிப்படைக்கு பள்ளிக்கூடத்தான் (எ) சென்றாயனுக்கு உரிமை ஏதும் இல்லையென்று முடிவு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பி.வ.சா.ஆ.24 ஆவணத்தை ஒத்த ஆவணங்கள் அ.வ.எண் 1213/86 வழக்கில் வா.சா.ஆ.7 ஆக பள்ளிக்கூடத்தான் (எ) சென்றாயனால் ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்டு, அதனை பரிசீலனை செய்த விசாரணை நீதிமன்றம் மேற்படி வழக்கை பள்ளிக்கூடத்தான் (எ) சென்றாயன் 50 சென்ட் நிலத்திற்காக தாக்கல் செய்யப்பட்டிருந்தபோதிலும், அவரால் தாக்கல் செய்யப்பட்டிருந்த மேற்படி வழக்கின் வா.சா.ஆ.7 ஆவணத்தில் 33 சென்ட் மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதாலும், அது உரிமை மூல ஆவணம் என்பதாலும் மேற்படி ஆவணத்தின் அடிப்படைக்கு பள்ளிக்கூடத்தான் (எ) சென்றயானுக்கு சொத்தில் உரிமை இல்லையென்றும் முடிவு செய்துள்ள நிலையில் அதே ஆவணங்களை 1ம் பிரதிவாதி மீண்டும் இவ்வழக்கில் தாக்கல் செய்து, அந்த ஆவணங்களின் அடிப்படையிலேயே மீண்டும் உரிமை கோருவது ஏற்புடையதாக இல்லை.

17.இவ்வழக்கின் 1ம் பிரதிவாதி தரப்பில் வாதிட்ட வழக்கறிஞர் வழக்கு சொத்தின் சுவாதீனம் தொடர்ந்து வாதிகளிடம் இருந்தது என்பதையும், அது எந்த தேதியில் 1ம் பிரதிவாதியால் இடையூறு செய்யப்பட்டு ஆக்கிரமிப்பு செய்யப்பட்டது என்பதையும் தெளிவாக நிரூபித்திருந்தால் மட்டுமே விளம்புகை மற்றும் சுவாதீன பரிகாரத்தை வழங்க இயலும் என்று வாதிட்டார். மேலும் மேற்படி வாதகளின் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.4 மற்றும் வா.சா.ஆ.5 ஆவணங்களை அடிப்படையாகக் கொண்டு வாதிகள் வழக்கு சொத்திலிருந்து 1ம் பிரதிவாதியால் இடையூறு செய்யப்பட்டு வெளியேற்றப்பட்டு 1ம் பிரதிவாதி வழக்கு சொத்தை ஆக்கிரமிப்பு செய்துக்கொண்டார் என கருத இயலாது என்றும், அதன் பிறகு வாதிகளின் வழக்கறிஞரால் கொடுக்கப்பட்ட வா.சா.ஆ.16 வழக்கறிஞர் அறிவிப்போ, பின்னிட்டு ஏலகிரிமலை காவல்நிலையத்தினரால் வழங்கப்பட்ட வா.சா.ஆ.21 ரசீதோ வாதிகளின் வழக்கிற்கு ஏற்புடையதல்ல என்றும், எனவே சுவாதீன பரிகாரத்தை பொறுத்தவரையில் வாதிகள் தங்களது கட்சியை தெளிவாக நிரூபிக்கவில்லையென்றும் வாதிட்டார். இருந்தபோதிலும் வழக்கு சொத்து சர்வே எண் 309ல் உள்ள 33 சென்ட் நிலமானது ஏற்கனவே 1ம் பிரதிவாதியால் உரிமை கோரப்பட்டு, உரிமை மறுக்கப்பட்ட 50 சென்ட் நிலத்தின் ஒரு பகுதி என்று 1ம் பிரதிவாதியால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அதேபோன்று வாதியின் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.10 முதல் வா.சா.ஆ.13 வரையிலான ஆவணங்களும் சர்வே எண் 309ல் உள்ள 10 ஏக்கர் சொத்தானது வாதிகளின் குடும்பத்திற்கு பாத்தியப்பட்டது என்பதை வெளிப்படுத்துகின்றது. எனவே வழக்கு சொத்து சர்வே எண் 309ல் உள்ள 33 சென்ட் நிலம் எங்கு உள்ளது என்பது வாதிகளால் அளவீடு செய்து அடையாளம் காணப்படவில்லையென்று 1ம் பிரதிவாதியின் தரப்பில் தெரிவிக்கப்பட்டபோதிலும் மேற்படி 1ம் பிரதிவாதி தாக்கல் செய்திருந்த அ.வ.எண் 1213/86 மற்றும் இவ்வழக்கு சொத்தக்கள் ஒரு நான்கு எல்லைகளுக்குள் உள்ளவை என்றும், மேற்படி அ.வ.எண் 1213/86 வழக்கு சொத்தின் ஒரு பகுதி சொத்துதான் இவ்வழக்கு சொத்து என்றும் 1ம் பிரதிவாதியே ஏற்றுக்கொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். மேற்படி சர்வே எண் 309ல் உள்ள மொத்த விஸ்தீரணம் 10 ஏக்கர் நிலம் முழுவதும் வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்பதை வாதிகள் நிரூபித்துள்ளார்கள். மேற்படி 10 ஏக்கர் சொத்தில் ஒரு

பகுதி சொத்துதான் இவ்வழக்கு சொத்து என்பது 1ம் பிரதிவாதியால் வாய்மொழி சாட்சியம் மற்றும் வா.சா.ஆ.14 ஆவணம் ஆகியவற்றில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள சூழ்நிலையில் அவரது தரப்பில் விசாரிக்கப்பட்ட பி.வா.சா.2 முதல் பி.வா.சா.4 வரையிலான சாட்சிகளின் அடிப்டையிலோ, பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.24 வரையிலான ஆவணங்களின் அடிப்படையிலோ மேற்படி சொத்து 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்று 1ம் பிரதிவாதி வாதிட இயலாது. இந்த சூழ்நிலையில் வழக்கு சொத்து 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டதல்ல என்றும், அது 1ம் வாதி மற்றும் அவரது வாரிசுகளுக்கு பாத்தியப்பட்டது என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது. எனவே வழக்கு சொத்து மேல்முறையீட்டாளர்/1ம் பிரதிவாதிக்கு பாத்தியபட்டதல்ல என்றும், எதிர்மேல்முறையீட்டாளர்கள்/1ம் வாதி மற்றும் அவரது வாரிசுகளுக்கு பாத்தியப்பட்டது என்றும் முடிவு செய்து பிரச்சினை 3க்கு தீர்வு காணப்படுகின்றது.

18.<u>பிரச்சினைகள் 1, 2 மற்றும் 4:</u> இவ்வழக்கானது எதிர்மேல்முறையீட்டாளர்கள்/வாதிகளால் வழக்கு சொத்தை பொறுத்து விளம்புகை மற்றும் சுவாதீன பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆனால் இவ்வழக்கு சொத்தானது 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்று எதிர்வாதம் செய்யப்பட்டு, அவரது தரப்பில் பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.24 வரையிலான ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டு, சாட்சிகளும் விசாரிக்கப்பட்டுள்ளது. ஆனால் மேற்படி 1ம் பிரதிவாதியின் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் எதுவும் வழக்கு சொத்தை பொறுத்து 1ம் பிரதிவாதிக்கு உரிமை மூலம் வழங்கப்படக்கூடிய ஆவணங்கள் அல்ல. இதற்கு முந்தைய வழக்கு நடவடிக்கைகளில் 1ம் பிரதிவாதியால் இதே ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்ததில் இவ்வழக்கு சொத்தை உள்ளடக்கிய அடங்கிய 50 சென்ட் நிலம் 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டதல்ல என்றும், அவரது சுவாதீனத்தில் இல்லையென்றும் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் வரை இரண்டாவது மேல்முறையீட்டு வழக்கில் முடிவு செய்யப்பட்டுள்ளது. அதன் காரணமாகத்தான் 1ம் பிரதிவாதிக்கு இவ்வழக்கு சொத்தான 33 சென்டையும் உள்ளடக்கிய 50 சென்ட் நிலத்திற்கு விளம்புகை பரிகாரமும், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும் வழங்கப்படாமல் மறுக்கப்பட்டுள்ளது. மேற்படி மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தாலும் 1ம் பிரதிவாதியின் கந்தாய வரி ரசீதுகள் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. ஆனால் 1ம் பிரதிவாதி தரப்பில் வாதிட்ட வழக்கறிஞர் இதற்கு முந்தைய வழக்கு நடவடிக்கைகளில் இவ்வழக்கின் 1ம் வாதியான பெரியாண்டி சாட்சியாக விசாரிக்கப்பட்டதில் வழக்கு சொத்து 1ம் பிரதிவாதி பள்ளிக்கூடத்தான் (எ) சென்றாயன் சுவாதீனத்தில் உள்ளது என்று ஏற்றுக்கொண்டுள்ளார் என்றும், அதனை இந்நீதிமன்றம் தெரிந்துக்கொள்ளக்கூடாது என்பதற்காக மேற்படி பெரியாண்டியை இவ்வழக்கில் சாட்சியாக விசாரிக்கப்படவில்லையென்றும், எனவே வாதிதிகளின் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று தெரிவித்துள்ளார். ஆனால் மேற்படி பெரியாண்டி அவரது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் 1ம் பிரதிவாதி தரப்பில் வாதிட்ட வழக்கறிஞர் தெரிவிப்பது போன்று சாட்சியமே அளித்திருந்தாலும் அது விசாரணை நீதிமன்றத்திலும், முதல் மேல்முறையீட்டு நீதிமன்றத்திலும், இரண்டாவது மேல்முறையீட்டு நீதிமன்றமான மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்திலும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. மேற்படி பெரியாண்டியின் குறுக்கு விசாரணை சாட்சியத்தை மட்டும் வைத்துக்கொண்ட பள்ளிக்கூடத்தான் (எ) சென்றாயனுக்கு சொத்து பாத்தியப்பட்டது என்று முடிவு செய்ய இயலாது என்ற காரணத்தினாலும், இரு தரப்பிலும் முன்னிடப்பட்டள்ள வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியங்கள் மூன்று நீதிமன்றங்களில் பரிசீலனை செய்யப்பட்டு

பள்ளிக்கூடத்தான் (எ) சென்றாயனுக்கு இவ்வழக்கு சொத்தை உள்ளடக்கிய 50 சென்ட் நிலம் பாத்தியப்பட்டதல்ல என்று முடிவு செய்யப்பட்டுள்ள காரணத்தினால் மேற்படி பெரியாண்டியின் குறுக்கு விசாரணை சாட்சியத்தினை மேற்கோள் காட்டி 1ம் பிரதிவாதியின் தரப்பில் தெரிவிக்கப்படும் வாதம் ஏற்புடையதல்ல. அவ்விதம் வாதம் செய்வதற்கும் 1ம் பிரதிவாதி தடை செய்யப்பட்டுள்ளார்.

19. வழக்கு சொத்தில் மேல்முறையீட்டாளர்/பிரதிவாதி சுவாதீனத்தில் இருந்து வருகிறார் என்று கட்சி செய்து வந்தபோதிலும் மேற்படி வழக்கு சொத்தில் 1ம் பிரதிவாதியோ அவரது குடும்பத்தினரோ சுவாதீனத்தில் இல்லை என்பதை வா.சா.ஆ.14 மற்றும் வா.சா.ஆ.15 ஆவணங்கள் வெளிப்படுத்தியுள்ள காரணத்தினாலும், 1ம் பிரதிவாதியின் சுவாதீனம் மற்றும் உரிமை மூல கட்சி மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் வரை ஏற்றுக்கொள்ளப்படவில்லையென்ற காரணத்தினாலும், வழக்கு சொத்தில் மேற்படி இரண்டாவது மேல்முறையீடு வழக்கு முடிவடையும் வரையில் 1ம் பிரதிவாதி சுவாதீனத்தில் இல்லையென்பது உறுதிபடுத்தப்பட்டுள்ளது. எனவே மேற்படி கந்தாய வரி ரசீதுகளான பி.வா.சா.ஆ.5 முதல் பி.வா.சா.ஆ.21 வரையிலான ஆவணங்களையும், சிட்டா மற்றும் அடங்கல் ஆவணங்களான பி.வா.சா.ஆ.3 மற்றும் பி.வா.சா.ஆ.4 ஆவணங்களையும் வைத்துக்கொண்டு வழக்கு சொத்தில் 1ம் பிரதிவாதி ஆரம்பம் முதலே சுவாதீனத்தில் இருந்து வருகிறார் என்று செய்யப்படும் கட்சி ஏற்புடையதல்ல. 1ம் வாதியின் தகப்பனார் ஆண்டியும், 1ம் பிரதிவாதியின் தகப்பனார் சென்றாயனும் சகோதரர்கள் என்பதும், அவர்களுக்கு தகப்பனார் ஒருவர், தாயார் இருவர் என்பதும் இரு தரப்பிலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. எனவே 1ம் பிரதிவாதி, 1ம் வாதி ஒரு குடும்பத்தை சேர்ந்தவர்கள் என்பதால் 1ம் பிரதிவாதி பெயரில் உள்ள கந்தாய வரி ரசீதுகள் முக்கியத்துவம் பெறவில்லை. அது தனிப்பட்ட உரிமையையும் வழங்காது. மேலும் மேற்படி அ.வ.எண் 1213/86 வழக்கின் நீதிமன்ற ஆணையர் வழக்கு சொத்தை பார்வை செய்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ளதாகவும் அந்த அறிக்கை மற்றும் வரைபடம் பி.வா.சா.ஆ.23 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்படி நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்தில் வழக்கு சொத்தில் 1ம் பிரதிவாதிதான் சுவாதீனத்தில் உள்ளார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், 1ம் பிரதிவாதியின் தரப்பில் வாதிட்ட வழக்கறிஞர் தெரிவித்தார். இருப்பினும் ஒரு வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் மற்றொரு வழக்கில் தாக்கல் செய்யப்பட வேண்டும் எனில் சம்மந்தப்பட்ட நீதிமன்ற ஆணையரை அழைத்து அவர் மூலமாகத்தான் குறியீடு செய்யப்பட வேண்டும் என்று மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட முன்னோடி தீர்ப்பான

**Murugesan .. Petitioner**

**//vs//**

**Karupayee Ammal and another .. Respondents**

**Reported in 2003 MLJ 767**

என்ற முன்னோடி தீர்ப்பில் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது. மேலும் ஒரு நீதிமன்ற ஆணையர் வழக்கு சொத்தின் சுவாதீனத்தை பொறுத்து தனது அறிக்கை மற்றும் வரைபடத்தை தாக்கல் செய்ய இயலாது என்றும், சொத்தின் சுவாதீனம் யாரிடம் உள்ளது என்பதை நீதிமன்ற ஆணையர் தெரிவிக்க இயலது என்றும் பல்வேறு முன்னோடி தீர்ப்புகளில் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது.

எனவே சம்மந்தப்பட்ட நீதிமன்ற ஆணையரை வழக்கில் விசாரித்து அவர் மூலமாக குறியீடு செய்யப்படாத பி.வா.சா.ஆ.23 ஆவணத்தில் கண்டுள்ள ஷரத்துக்களின் அடிப்படையில் வழக்கு சொத்து 1ம் பிரதிவாதியின் சுவாதீனத்தில் உள்ளது என்று 1ம் பிரதிவாதியின் தரப்பில் செய்யப்படும் கட்சி ஏற்புடையதல்ல.

20.மேற்படி வாதிகள் இவ்வழக்கினை தாக்கல் செய்து இரண்டாவது மேல்முறையீட்டு வழக்கு வரை தோல்வி அடைந்த 1ம் பிரதிவாதி கடந்த 01.07.1993ல் வழக்கு சொத்தில் அத்துமீறி நுழைந்து ஆக்கிரமிப்பு செய்ததாக தெரிவித்துள்ளார்கள். அது சம்மந்தமாக காவல்துறைக்கும் புகார் கொடுக்கப்பட்டதாகவும், காவல் துறையினர் ரசீதும் வழங்கியிருப்பதாகவும் வா.சா.ஆ.4 மற்றும் வா.சா.ஆ.5 ஆவணங்களை தாக்கல் செய்துள்ளார். இருப்பினும் மேற்படி ஆவணங்களை மட்டும் வைத்துக்கொண்டு வழக்கு சொத்தில் 1ம் வாதி கொண்டிருந்த சுவாதீனத்தை இடையூறு செய்து 1ம் பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்துக்கொண்டார் என்று கட்சி செய்ய இயலாது என 1ம் பிரதிவாதி தரப்பில் வாதிட்ட வழக்கறிஞர் தெரிவித்தார். மேலும் இவ்வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் வழக்கு சொத்தில் 1ம் வாதி சுவாதீனத்தில் இருப்பதாக தெரிவித்து யாதொரு ஆவணங்களும் தாக்கல் செய்யப்படவில்லையென்றும், 1ம் வாதி மற்றும் 1ம் பிரதிவாதிக்கும் இடையே வழக்கு சொத்தை பொறுத்து ஏற்கனவே நடைபெற்று வந்த வழக்கு ஆவணங்களும் ஏலகிரி காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்ட புகார் மற்றும் ரசீது மட்டும்தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் வாதிட்டு வாதிகளின் வழக்கு நிலைக்கக்கூடியதல்ல என்று தெரிவித்தார். இருந்தபோதிலும் இவ்வழக்கு சொத்தை உள்ளடக்கிய 50 சென்ட் நிலத்தில் 1ம் பிரதிவாதி பள்ளிக்கூடத்தான் (எ) சென்றாயன் சுவாதீனத்தில் இல்லையென்றும், மேற்படி 50 சென்ட் நிலம் பள்ளிக்கூடத்தான் (எ) சென்றாயனுக்கு பாத்தியப்பட்டதல்ல என்றும், மேற்படி சொத்து பெரியாண்டிக்கு பாகத்தில் வந்து அவரது சுவாதீனத்தில் இருந்து வந்த சொத்து என்றும் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் வரை முடிவு செய்யப்பட்ட காரணத்தினால் மேற்படி S.A 1602/93 வழக்கு முடிவடையும் வரையில் வழக்கு சொத்தில் 1ம் பிரதிவாதி சுவாதீனத்தில் இல்லை என்றே அனுமானிக்க வேண்டியுள்ளது. இந்த சூழ்நிலையில் கடந்த 01.07.1993 அன்றுதான் 1ம் பிரதிவாதி வழக்கு சொத்தில் அத்துமீறி நுழைந்து கொண்டார் என்று வாதிகளின் தரப்பில் தெரிவிக்கப்படும் வாதமானது ஏற்புடையதாக உள்ளது. 1ம் பிரதிவாதியின் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சிட்டா மற்றும் அடங்கல் ஆவணங்களில் மூன்று கூரை வீடுகள் மற்றும் ஒரு களம் வழக்கு சொத்தில் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், அது 1ம் பிரதிவாதியின் சுவாதீனத்தில்தான் உள்ளது என்றும், 1ம் பிரதிவாதி தரப்பில் வாதிட்ட வழக்கறிஞர் தெரிவித்தபோதிலும் வாதிகளின் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.14 ஆவணம் மூலமாக 1ம் பிரதிவாதியும் அவரது தகப்பனார் மற்றும் அவரது ஒரு சகோதரரும் வா.சா.ஆ.15 ஆவணம் மூலமாக 1ம் பிரதிவாதியின் மற்றொரு சகோதரரும், தாயலூர் கிராம சர்வே எண் 310, 302ல் மூன்று கூரை வீடுகள் உள்ளது என்று தெரிவிதுள்ள சூழ்நிலையில் இவ்வழக்கில் 1ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சிட்டா மற்றும் அடங்கல் ஆவணங்கள் 1ம் பிரதிவாதியின் கட்சிக்கு வலு சேர்ப்பதில்லை. எனவே வழக்கு சொத்தில் மேல்முறையீட்டாளர்/1ம் பிரதிவாதிதான் ஆரம்பம் முதல் சுவாதீனத்தில் இருந்து வருகிறார் என்று அவரால் தெரிவிக்கப்படும் சங்கதி ஏற்புடையதல்ல என்றும், மேற்படி 1ம் பிரதிவாதி வழக்கு சொத்தில் ஆரம்பம் முதல் சுவாதீனத்தில் இருந்து வருகிறார் என்று 1ம்

வாதியால் இதற்கு முந்தைய வழக்கு நடவடிக்கையில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என்று 1ம் பிரதிவாதியின் தரப்பில் தெரிவிக்கப்படும் சங்கதியும் ஏற்புடையதல்ல என்றும், வழக்கு சொத்தில்

1ம் வாதி மற்றும் அவரது வாரிசுகள் S.A 1602/93 வழக்கு முடிவடையும் வரையில் சுவாதீனத்தில் இருந்ததாக மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் ஏற்றுக்கொண்டுள்ள சூழ்நிலையில் அதுவரை 1ம் வாதிதான் வழக்கு சொத்தின் சுவாதீனத்தில் இருந்து வந்துள்ளார் என்றும், அதன் பின்னர் 01.07.1993ல் தான் 1ம் பிரதிவாதி வழக்கு சொத்தில் அத்துமீறி நுழைந்து சுவாதீனத்தில் இருந்து வருகிறார் என்று முடிவு செய்து பிரச்சினைகள் 1, 2 மற்றும் 4க்கு தீர்வு காணப்படுகின்றது.

21.**<u>பிரச்சினை 5:</u>** வழக்கு சொத்தில் 1ம் பிரதிவாதி ஆதியிலிருந்து சுவாதீனத்தில்

இருந்து வருவதாக தெரிவித்திருந்தபோதிலும் அது ஏற்புடையதல்ல என்றும், S.A 1602/93 வழக்கானது முடிவடையும் வரையில் வழக்கு சொத்தில் 1ம் வாதிதான் சுவாதீனத்தில் இருந்து வந்துள்ளார் என்றும், 01.07.1993 அன்றுதான் 1ம் பிரதிவாதி வழக்கு சொத்தில் அத்துமீறி நுழைந்துள்ளார் என்றும் இதற்கு முந்தைய வழக்கு நடவடிக்கைகளின் அடிப்படையிலும் தற்போது இவ்வழக்கில் முன்னிடப்பட்டுள்ள வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியங்களிலும் தெளிவாக தெரிய வருகிறது. எனவே வழக்கு சொத்தில் உரிமை இல்லாத 1ம் பிரதிவாதி தற்போது சுவாதீனத்தில் இருப்பதற்கு அருகதை அற்றவர் ஆவார். வழக்கு சொத்து 1ம் வாதி மற்றும் அவரது வாரிசுகளுக்கு பாத்தியப்பட்டது என்பது வாதிகளின் தரப்பில் நிருபிக்கப்பட்டுள்ளது. எனவே வழக்கு சொத்தை 1ம் வாதி மற்றும் அவரது வாரிசுகளுக்கு பாத்தியப்பட்டது என்று வாதிகளால் கோரப்பட்டுள்ள விளம்புகை பரிகாரமும், வழக்கு சொத்தை 1ம் பிரதிவாதி, வாதிகளிடம் ஒப்படைக்க வேண்டும் என்று கோரப்பட்டுள்ள சுவாதீன பரிகாரமும் எதிர்மேல்முறையீட்டாளர்கள்/வாதிகள்/1ம் வாதியின் வாரிசுகளுக்கு கிடைக்கக்கூடியது என முடிவு செய்து பிரச்சினை 5க்கு தீர்வு காணப்படுகின்றது.

22.**<u>பிரச்சினைகள் 6 மற்றும் 7</u>**: வழக்கு சொத்து ஏலகிரிமலை தாயலூர் கிராம சர்வே எண் 309ல் உள்ள 33 சென்ட் நிலமாகும். மேற்படி சர்வே எண்ணின் மொத்த விஸ்தீரணம் 10 ஏக்கர் என்பது இரு தரப்பிலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. ஆனால் 10 ஏக்கர் சொத்தில் 1ம் பிரதிவாதி பள்ளிக்கூடத்தான் (எ) சென்றயானுக்கு 50 சென்ட் நிலம் பாகப்பிரிவினையில் வந்ததாக இவ்வழக்கிற்காக வேண்டி பொய்யாக தெரிவிக்கிறார் என்பதும், வா.சா.ஆ.14 மற்றும் வா.சா.ஆ.15 ஆவணங்களின் அடிப்படைக்கு வாதிகள் தரப்பில் நிருபிக்கப்பட்டுள்ளது. மேற்படி 1ம் பிரதிவாதி வழக்கு சொத்தில் ஆரம்பம் முதலே சுவாதீனத்தில் இருந்து வருவதாக தெரிவித்திருந்தபோதிலும் இதற்கு முந்தைய வழக்கு நடவடிக்கையில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் வரை அது ஏற்றுக்கொள்ளப்படவில்லை. எனவே 1ம் பிரதிவாதியின் கட்சி விசாரணை நீதிமன்றம், முதல் மேல்முறையீட்டு நீதிமன்றம் மற்றும் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்படவில்லையென்ற காரணத்தினால் 1ம் பிரதிவாதியின் தரப்பில் வாதிட்ட வழக்கறிஞர் மேற்கோள் காட்டிய மாண்புமிகு உச்சநீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதிமன்றத்தின் முன்னோடி தீர்ப்புகளான

1) **Sadhasivam .. Petitioner**
**//vs//**
**Chellamuthu .. Respondent**
**Reported in 2007(1) CTC 572**

2) **Enose and others .. Appellants**
**//vs//**
**Thankapan and others.. Respondents**
**Reported in 1999 AIHC 1649**

3) **Abdul Wahith .. Appellant**
**//vs//**
**Mohammed Ali .. Respondent**
**Reported in 2016(2) MLJ 404**

4) **Sebastiao Luis Fernandes (Dead) .. Appellants**
**//vs//**
**K.V.P.Shastri (Dead) .. Respondents**
**Reported in 2013 (15) SCC 161**

5) **Shanmugam .. Appellant**
**//vs//**
**Elumalai Gounder & others.. Respondents**
**Reported in 2010(1) MWN (Civil) 556**

என்ற முன்னோடி தீர்ப்புகள் இவ்வழக்கின் சூழ்நிலைக்கு பொருந்தக்கூடியதல்ல. ஏனெனில் இதே வழக்கு சொத்தை பொறுத்து மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தால் இவ்வழக்கு 1ம் பிரதிவாதிக்கு எதிராக S.A 1602/93 வழக்கில் தீர்ப்பளித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும். மேற்படி வழக்கில் தற்போது இவ்வழக்கின் 1ம் பிரதிவாதி செய்து வரும் கட்சி ஏற்புடையதல்ல என்றும், அவருக்கு எதிராக மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் முடிவு செய்துள்ளதும் குறிப்பிடத்தக்கதாகும். மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் 1ம் பிரதிவாதிக்கு எதிராக S.A 1602/93 வழக்கில் இவ்வழக்கு சொத்தை உள்ளடக்கிய 50 சென்ட் நிலத்தை பொறுத்து தீர்ப்பளித்துள்ள நிலையில் அதற்கு முரண்பட்ட வகையில் மேற்படி வழக்கு சொத்தில் ஆதியிலிருந்து 1ம் பிரதிவாதி சுவாதீனத்தில் இருப்பதாகவும், வழக்கு சொத்து 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றும், அவரால் செய்யப்படும் கட்சி ஏற்புடையதல்ல என்றும், வழக்கு சொத்து 1ம் வாதி மற்றும் அவரது வாரிசுகளுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றும், இதற்கு முந்தைய பத்திகளில் முடிவு செய்யப்பட்டுள்ளது. எனவே வழக்கு சொத்தில் உரிமை இல்லாத 1ம் பிரதிவாதி 01.07.1993ல் அத்துமீறி நுழைந்து சுவாதீனம் அடைந்துள்ளார் என்றும் இதற்கு முந்தைய பத்திகளில் முடிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி அ.வ.எண் 443/94 வழக்கில் இரு தரப்பலும் முன்னிடப்பட்ட வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியங்களை பரிசீலனை செய்த விசாரணை நீதிமன்றம் முறையாக பரிசீலனை செய்தும் 1ம் வாதி மற்றும் 1ம் பிரதிவாதிக்கும் இடையே இவ்வழக்கு சொத்தினையும் உள்ளடக்கிய 50 சென்ட் நிலத்தை பொறுத்து இதற்கு முந்தைய வழக்கு நடவடிக்கைகளில்

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம்வரை வழங்கப்பட்டுள்ள தீர்ப்புகளை முறையாக பரிசீலனை செய்தும், கடந்த 29.09.2009 அன்று வாதிகளின் வழக்கை சரியான வகையில் அனுமதித்து வழக்கு சொத்தின் சுவாதீனத்தை 1ம் பிரதிவாதி வாதிகளிடம் ஒப்படைக்க வேண்டும் என்று சரியான வகையில் தீர்ப்பளித்துள்ளது. எனவே வாதிகளின் வழக்கை அனுமதிப்பதற்கு விசாரணை நீதிமன்றத்தால் மேற்கோள் காட்டப்பட்ட காரணங்கள் சரியானது என்ற காரணத்தினாலும், இம்மேல்முறையீட்டு வழக்கை தாக்கல் செய்வதற்கு மேல்முறையீட்டாளரால் மேற்கோள் காட்டப்பட்ட மேல்முறையீட்டிற்கான காரணங்கள் ஏற்புடையதல்ல என்ற காரணத்தினாலும் மேல்முறையீட்டாளர்/1ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மேல்முறையீட்டு வழக்கை அனுமதிக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. எனவே விசாரணை நீதிமன்றத்தால் அ.வ.எண் 443/1994 வழக்கில் கடந்த 20.09.2009 அன்று வழங்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை உறுதி செய்யப்பட்டு, 1ம் பிரதிவாதி/மேல்முறையீட்டாளரால் தாக்கல் செய்யப்பட்ட இந்த மேல்முறையீட்டு வழக்கை தள்ளுபடி செய்து இன்றிலிருந்து இரண்டு மாத காலத்திற்குள் வழக்கு சொத்தின் சுவாதீனத்தை மேல்முறையீட்டாளர்/1ம் பிரதிவாதி, எதிர்மேல்முறையீட்டாளர்கள்/வாதிகள் வசம் ஒப்படைக்க வேண்டும் என தீர்ப்பளிப்பதே நீதிக்கு உகந்ததாக இருக்குமென்று பிரச்சினைகள் 6 மற்றும் 7க்கு மேல்முயீட்டாளருக்கு எதிராக தீர்வு காணப்படுகின்றது.

23.<u>பிரச்சினை 8:</u> இதர பரிகாரங்களை பொறுத்தவரையில் உபய வாதிகளுக்கு ஏதுமில்லை. வழக்கு மற்றும் மேல்முறையீட்டு வழக்கின் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு செலவுத் தொகை இல்லை.

24.**முடிவில் இம்மேல்முறையீட்டு வழக்கு தள்ளுபடி செய்து விசாரணை நீதிமன்றமான திருப்பத்தூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அசல் வழக்கு எண் 443/1994ல் கடந்த 29.09.2009 அன்று பிறப்பித்த தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை உறுதி செய்து, இன்றிலிருந்து இரண்டு மாத காலத்திற்குள் வழக்கு சொத்தின் சுவாதீனத்தை மேல்முறையீட்டாளர்/1ம் பிரதிவாதி, எதிர்மேல்முறையீட்டாளர்கள்/வாதிகள் வசம் ஒப்படைக்க வேண்டும் என தீர்ப்பளிக்கப்படுகின்றது. மேல்முறையீட்டு வழக்கின் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு செலவுத் தொகை இல்லை.**

என்னால் நேரிடையாக சுருக்கெழுத்து தட்டச்சருக்கு 10.01.2019 அன்று மாலை 04.00 மணியளவில் நேரடியாகச் சொல்ல அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு 2019ம் ஆண்டு ஜனவரி திங்கள் 11ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

சார்பு நீதிபதி,
திருப்பத்தூர்

<u>இம்மேல்முறையீட்டு வழக்கில் மேல்முறையீட்டாளர் தரப்பு சாட்சி</u>:
1.திருமலை, உதவியாளர், வட்டாட்சியர் அலுவலகம், திருப்பத்தூர் (பி.வா.சா.4)

<u>மேல்முறையீட்டாளர் தரப்பு சான்றாவணங்கள்:</u>

| | | |
|---|---|---|
| பி.வா.சா.ஆ.24. | 07.02.1991 | திருப்பத்தூர் தனி வட்டாட்சியரால் வழங்கப்பட்ட மலை கிராமத்திய நடப்பு கணக்கிற்கு பதிவு திட்டத்தின் பதிவேடு நகல் |

(விசாரணை நீதிமன்றத்தில் பி.வா.சா.1 முதல் பி.வா.சா.3 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.23 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.)

<u>இம்மேல்முறையீட்டு வழக்கில் எதிர்மேல்முறையீட்டாளர்கள் தரப்பு சாட்சி</u>:

1.சென்றாயன் (4வது எதிர்மேல்முறையீட்டாளர்) (வா.சா.1)

(கூடுதல் முதல் விசாரணை பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு கூடுதல் சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.)

<u>எதிர்மேல்முறையீட்டாளர்கள் தரப்பு சாட்சி</u>:

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.10. | 15.05.1924 | ஆண்டி கவுண்டர், கவுண்டப்பன் பெயருக்கு எழுதிக்கொடுத்த பதிவு செய்யப்பட்ட ஈடு காட்டி அடமானப் பத்திரம் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.11 | 12.06.1936 | ஆண்டி கவுண்டர், கவுண்டப்பன் பெயருக்கு 6 ஏக்கர் சொத்து குறித்து எழுதிக்கொடுத்த பதிவு செய்யப்ப்டட கிரையப் பத்திரம் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.12. | 12.06.1936 | ஆண்டி கவுண்டர், சென்றாயன் பாடடி பெயருக்கும், சென்றாயன் தந்தை பெயருக்கும் 4 ஏக்கர் சொத்து குறித்து எழுதிக்கொடுத்த தான செட்டில்மென்ட் பத்திரம் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.13. | 25.06.1952 | கவுண்டப்பன், புங்கியம்மாள் வகையறா பெயருக்கு 4 ஏக்கர் சொத்து குறித்து எழுதிக் கொடுத்த கிரைய ஆவணம் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.14. | .. | திருப்பத்தூர் சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண் 1/86 வழக்கில் பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர் வழக்குரை சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.15. | .. | திருப்பத்தூர் சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண் 1/86 வழக்கு பதிவேட்டு சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.16. | 28.10.2010 | வாதி வழக்கறிஞர், திருப்பத்தூர் வட்டாட்சியர், கிராம நிர்வாக அலுவலருக்கு கொடுத்த அறிவிப்பு அலுவலக நகல் |
| வா.சா.ஆ.17. | 30.10.2010 | திருப்பத்தூர் வட்டாட்சியரின் அஞ்சல் ஒப்புகை அட்டை அசல் |

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.18. | 02.11.2010 | ஏலகிரிமலை கிராம நிர்வாக அலுவலரின் அஞ்சல் ஒப்புகை அட்டை | அசல் |
| வா.சா.ஆ.19. | 24.04.2015 | வாதி வழக்கறிஞர், பிரதிவாதிக்கு கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பு | அலுவலக நகல் |
| வா.சா.ஆ.20. | 29.04.2015 | பிரதிவாதியின் அஞ்சல் ஒப்புகை அட்டை | அசல் |
| வா.சா.ஆ.21. | 05.05.2015 | சென்றாயன் காவல்துறையில் கொடுத்த புகாருக்கு ஏலகிரி மலை காவல்நிலையத்தில் கொடுத்த மனு ரசீது | அசல் |

(விசாரணை நீதிமன்றத்தில் வா.சா.1 மற்றும் வா.சா.2 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் வா.சா.1 கூடுதல் முதல் விசாரணை பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு, கூடுதல் சான்றாவணங்களாக வா.சா.ஆ.10 முதல் வா.சா.ஆ.21 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது)

சார்பு நீதிபதி,
திருப்பத்தூர்.